## பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை – 108 அவர்களின் செயல்முறைகள்

### முன்னிலை : திரு.து.இராசேந்திரன், இ.ஆ.ப.,

ந.க.எண்.6793/2009/அ1 நாள்.31 .12.2009

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தமிழ்நாடு பேரூராட்சி பணியாளர் சார்நிலைப்பணி சிறப்பு விதிகள் – திருத்தங்கள் வெளியிடப்பட்டது – அனைத்து செயல் அலுவலர் நிலைகள் நிலைகளில் – மாநில அளவில் அலகு நிர்ணயம் செய்தது – சிறப்பு நிலை செயல் அலுவலர் முதல் இரண்டாம் நிலை செயல் அலுவலர் வரை 1990ம் ஆண்டு முதல் 01.01.2009 வரை திருத்திய தற்காலிக முன்னுரிமைப்பட்டியல் – வெளியிடுதல்

பார்வை :
1. அரசாணை எண்.270 ஊரக வளர்ச்சி துறை நாள்.04.04.1990
2. அரசாணை (வ) எண்.62 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை நாள்.18.4.09
3. அரசாணை (ப) எண்.102 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை நாள்.18.6.09
4. சிறப்பு குழுவின் அறிக்கை நாள்.02.12.2009

----

**ஆணை:**

பேரூராட்சிகள் நிர்வாகம் அனைத்தும் 07.05.1981 முதல் பேரூராட்சிகளின் தனித்துறை நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டதற்கேற்ப, தமிழ்நாடு பேரூராட்சிகள் சார்நிலை பணிகளான அனைத்து நிலை பேரூராட்சிகள் செயல் அலுவலர்களுக்கான சிறப்பு பணி விதிகள் அரசாணை எண்.(ப)270 ஊரக வளர்ச்சி துறை நாள்.04.04.1990ல் வெளியிடப்பட்டதைத்தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளுக்கேற்ப அனைத்து நிலை செயல் அலுவலர் பணிகளை மாநில அளவில் பணி மூப்பு நிர்ணயம் செய்யத்தக்கவாறு, சிறப்பு பணி விதிகள் திருத்தம் அரசாணை எண்.62 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.04.2009ல் வெளியிடப்பட்டது. அதற்கேற்ப பின்வரும் விவரங்களைக்கருத்தில் கொண்டு மாநில அளவில் அனைத்து நிலை பேரூராட்சிகள் செயல் அலுவலர் நிலைகளில் 04.04.1990லிருந்து 01.01.2009 வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியே பணி மூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. 04.04.1990க்குப்பின்னர் பேரூராட்சிகளில் சிறப்பு நிலை, உதவி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் பதவிகள் பேரூராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்பட வாய்ப்பு ஏற்பட்டது.
2. மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி 04.04.1990க்கு பின்னர் வலியுறுத்தப்பட்டுள்ளது.
3. விதிமுறைகள் 04.05.1981 முதல் அமுல்படுத்தப்பட்டு பல்வேறு பதவிகளில் பணிபுரிந்து 07.05.81 லிருந்து 04.04.1990க்கு பின்னரும் பணிபுரிந்து ஓய்வுபெற்ற மற்றும் தொடர்ந்து பணிபுரியும் பணியாளர்களுக்கு, மேற்படி சிறப்பு பணி விதிகள் பொருந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

4. பேரூராட்சி சார்நிலை பணிக்கான பணி விதிகள் வெளியிடப்பட்ட 04.04.90ம் நாளில் பணியில் இருந்த சார்நிலை பணியாளர்களுக்கு Saving Clause வழி பணிப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

5. பணி மூப்புரிமை கணக்கில் பணியாளரின் பேரூராட்சி எழுத்தர் பணியில் சேர்ந்த நாளை கருத்தில் கொள்ளும்போது ஒரே நாளில் பல பணியாளர்கள் வரும்போது அன்னாரின் பிறந்த தேதி அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. (உம். வரிதண்டலர்கள் அரசு பணியில் பணி சேர்ந்த நாளாக 16.12.1988 உள்ளது.)

6. தமிழ்நாடு தேர்வாணைய குழு (TNPSC) தேர்வு வழி நியமிக்கப்பட்டவர்களை, அன்னாரது நியமன நாள் பணி மூப்புரிமைக்கு கருத்தில் கொள்ளப்பட்டது.

மேற்படி சிறப்பு பணி திருத்த விதிகளில் தெரிவிக்கப்பட்டதற்கேற்ப அனைத்து செயல் அலுவலர் நிலைகளில் மாநில அளவில் பணி மூப்பு பட்டியல் 1990 முதல் 01.01.2009 வரை தயாரித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதற்கேற்ப பணி ஒய்வு பெற்ற மற்றும் தற்போது பணிபுரியும் சார்நிலை பணியாளர்களுக்கு மாநில அளவிலான தற்காலிக மூப்புரிமை பட்டியல் இத்துடன் இணைத்து இதன்வழி வெளியிடப்படுகிறது. இம்முன்னுரிமை பட்டியலின்மீது ஆட்சேபணை மற்றும் முறையீடு இவ்வாணை வெளியிடப்பட்ட நாள் முதல் 30 நாட்கள் கால அளவிற்குள் தெரிவிக்ககேட்டு அனைத்து பேரூராட்சி சார்நிலை பணியாளர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. தெரிவிக்கப்படும் ஆட்சேபணை மற்றும் முறையீடு சம்பந்தப்பட்ட மண்டல உதவி இயக்குநர் வழி சமர்ப்பிக்கவும் இதன் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. இத்தற்காலிக முன்னுரிமைப்பட்டியல் பேரூராட்சிகள் துறை இணையதள முகவரியான 'www.tn.gov.in/dtp'-ல் வெளியிடப்பட்டுள்ளது.

பணியாளர்களால் தெரிவிக்கப்படும் ஆட்சேபணை மற்றும் முறையீடு விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள் பணி நிலை வாரியாக காலதாமதமின்றி இவ்வியக்ககத்திற்கு உடனடியாக அனுப்பித்தரும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்./ து. இராசேந்திரன்
பேரூராட்சிகள் இயக்குநர்

இணைப்பு : சிறப்பு நிலை செயல் அலுவலர் முதல்
இரண்டாம் நிலை செயல் அலுவலர் வரை
1990ம் ஆண்டு முதல் 01.01.2009 வரையிலான
திருத்திய தற்காலிக முன்னுரிமைப்பட்டியல்

பெறுநர் : பட்டியலில் கண்ட செயல் அலுவலர்கள்
(சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள் மூலமாக)

நகல் : 1. அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
3. அரசு செயலர், நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம், சென்னை

//உத்திரவுபடி//

31/12/09

இயக்குநருக்காக

31/12/09